வளன்ஆய்வு
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# ‘எம்டன்’ கப்பல் சென்னையில் குண்டு வீசி 108 ஆண்டுகள் நிறைவு’

ப.செல்வி, (72990-28099), முனைவர் பட்ட ஆய்வாளர், சைவ சித்தாந்தத்துறை, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

**ஆய்வுச்சுருக்கம்**

இந்தியாவின் முதல் விடுதலைப் போர் என்று குறிப்பிடப்படுவது 1857 இல் மீரட்டில் தொடங்கிய சிப்பாய்க் கலகம். ஆனால் 1806-லேயே தமிழகத்தின் வேலூர் கோட்டையில் கிழக்கிந்திய கம்பெனி ஆட்சிக்கு எதிராகக் கலகம் வெடித்தது. வேலூர் கலகத்தை இந்தியாவின் முதல் விடுதலைப் போராகக் கருத வேண்டும் என சில வரலாற்று அறிஞர்கள் கூறுகிறார்கள். கோட்டையில் திப்பு சுல்தானின் குடும்பத்தினர் சிறைவைக்கப்பட்டிருந்தனர். அங்கிருந்த படை வீரர்களுக்கு விதிக்கப்பட்ட ஆடைக் கட்டுப்பாடுகளும் மதச் சின்னங்களை அணிந்துகொள்வதற்கான தடையும் இந்து, இஸ்லாமிய மதங்களைச் சேர்ந்த 1,500 வீரர்களைச் சீற்றம்கொள்ள வைத்தன. ஜூலை 10 இரவில் இந்திய வீரர்களின் புரட்சி வெடித்து, 200-க்கும் மேற்பட்ட ஆங்கிலேயே அதிகாரிகள் கொல்லப்பட்டனர். கோட்டை புரட்சியாளர்கள் வசமானது. ஆனால், அது ஒரு நாள் மட்டுமே அவர்களிடம் நீடித்தது. மற்ற ஊர்களிலிருந்து வந்த ஆங்கிலேயப் படை புரட்சியாளர்களைக் கொன்று வேலூர் கோட்டையை மீண்டும் கைப்பற்றியது.

சுதேசி இயக்கத்தின் அடுத்தகட்ட நகர்வு: அந்நியப் பொருட்களைப் புறக்கணித்து, உள்நாட்டு உற்பத்திப் பொருட்களையும் உள்நாட்டு மக்கள் வழங்கும் சேவைகளையும் பயன்படுத்தும் சுதேசி சிந்தனை 20-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழகத்தில் பரவியது. தமிழக சுதேசி இயக்கம் அன்றைய நெல்லை மாவட்டத்தில் மையம்கொண்டிருந்தது. தூத்துக்குடியில் வழக்கறிஞராக இருந்த வ.உ.சிதம்பரனார் சுதேசி நாவாய்ச் சங்கத்தைத் தொடங்கினார். பிரித்தானிய கப்பல் நிறுவனங்களின் ஆதிக்கத்தை இது முடிவுக்குக் கொண்டுவந்து, சுதேசி இயக்கத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தியது. பாரதியார், சுப்பிரமணிய சிவா போன்ற தலைவர்களும் சுதேசி இயக்கத்தைத் தீவிரமாக முன்னெடுத்தனர். தான் நடத்திய இதழ்கள் மூலம் சுதேசி சிந்தனைகளை ஜி.சுப்பிரமணியம் பரப்பினார். வ.உ.சி, சிவா போன்றோரைக்

கைதுசெய்து சுதேசி இயக்கத்தை முடக்க ஆங்கிலேய அரசு முயன்றது. அன்றைய திருநெல்வேலி ஆட்சியர் ஆஷ், மணியாச்சியில் வாஞ்சிநாதனால் சுட்டுக்கொல்லப்பட்டதற்கு சுதேசி இயக்கத்தின் மீதான ஒடுக்குமுறையும் ஒரு காரணம்.

வணிக நோக்குடன் வந்த ஆங்கிலேயர் நம் நாட்டையே உரிமையாக்கிக் கொண்டனர். நம்மை அடிமைப்படுத்தியதோடு கொடுமைப்படுத்தவும் தொடங்கினர். அதனால் விடுதலைப் போராட்டம் நாடெங்கும் நிகழ்ந்தது. இதில் தமிழகத்தில் பங்கு தனிச்சிறப்புடையது. வெள்ளையரின் கொடுமையை எதிர்த்து 1790-இல் முதல் முழக்கம் செய்தவர் வீரபாண்டிய கட்டபொம்மன். அவர் தூக்கிலிடப்பட்டார். அவரைத் தொடர்ந்து ஊமைத்துரை, வேலு நாச்சியார், மருதுபாண்டியர், பூலித்தேவன், வேலுத்தம்பி எனப் பலர் வெள்ளையரைக் கடுமையாக எதிர்த்து வீரமரணம் எய்தினார். 1806-இல் திகழ்ந்த வேலூர்ச் சிப்பாய்க் கலகம் 1857-இல் நடந்த முதல் இந்திய விடுதலைப் போருக்கு வித்தாக அமைந்தது.

'தென்னாட்டுத்திலகர்' என்று போற்றப்படும் வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயருக்கு எதிராக சுதேசிக்கப்பல் கழகத்தைத் தோற்றுவித்துக் கப்பல் ஓட்டினார். 'கப்பலோட்டிய தமிழன்' என்ற புகழ் ஈட்டினார். இரட்டை ஆயுள் தண்டனை பெற்றுச் சிறையில் செக்கிழுத்தார். கல்லுடைத்தார் எண்ணற்ற இன்னலுற்றார். இவரை போன்று எம்டன் கப்பலில் பணி செய்து வீரமரணமடைந்த செண்பகராமன் குறித்து தகவல்களை அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் வெளி கொண்டு வருவதே இந்த ஆய்வின் நோக்கமாகும். இவ்வாறு சுதந்திரத்திற்காகத் தமிழ் மண்ணில் பலர் வீரமரணமடைந்து உள்ளனர். அவர்களில் ஒருவர் செண்பகராமன். அவரை பற்றியும் எம்டன் கப்பல் பற்றியும் இந்த ஆய்வு அமைந்துள்ளது.

**திறவுசொற்கள்**

எம்டன், செண்பகராமன், சிம்ம சொப்பனம், ஜெர்மானியபடை, கோரப்பார்வை, வாழ்வாதாரம், போலந்து, பீரங்கிகள், கல்வெட்டு, அருங்காட்சியகம், நினைவிடம், நாஞ்சில் நாடு, மூழ்கடித்து, அஸ்தி, கரமனை, மோஸ்கெட், கார்மோரான், ரியாசான், அன்னப்பறவை.

**முன்னுரை**

'பாருக்குள்ளே நல்ல நாடு நம் பாரத நாடு' என்றார் நம் தமிழ்க்கவி பாரதி. நம் பாரத திருநாட்டில் மக்கள் ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டு கிடந்தனர். அவர்களை

மீட்கவும், இந்தியா சுதந்திரம் அடையவும் போராடிய தியாக செம்மல்களில் பலர் தமிழ்நாட்டில் இருந்தனர். பூலித்தேவன் என்ற பாளையக்காரன் தனக்குரிய நெற்கட்டான் செவ்வல் பகுதியை முற்றுகையிட்ட ஆங்கிலேயரை எதிர்த்து வென்றான். இதுவே விடுதலைப் போரின் முதல் முழக்கமாகும். வானம் பொழியுது, பூமி விளையுது, வெள்ளையருக்கு ஏன் வரி தரவேண்டும் என வீர முழக்கமிட்டான் வீரபாண்டிய கட்டபொம்மன். அவனைப் போலவே வீரன் ஊமைத்துரை, வேலுநாச்சியார், சிவகங்கை மருதுசகோதரர்கள், தீரன் சின்னமலை முதலானோர் ஆங்கிலேயரை எதிர்த்து வீரமரணம் அடைந்தனர். அவர்களின் உரிமைப்போர் தோற்றாலும், அவர்கள் உண்டாக்கிய விடுதலை உணர்வு வளர்ந்தது.

இந்திய திருநாட்டின் விடுதலைக்கு சுதந்திரமே எனது பிறப்புரிமை என்று முழக்கமிட்டு போராட்டத்தில் பங்கேற்றவர் பாலகங்காதர திலகர். அவருடைய வழியை தீவிரமாக பின்பற்றி ஆங்கிலேயரை தமிழகத்தில் எதிர்த்தவர் கப்பலோட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார். அவரை சிறையில் அடைத்தனர். ஆங்கிலேயர்களின் சித்ரவதைக்கு அவர் ஆளாகினார். கல்லுடைத்தார், கசையடிப்பட்டார். ஆயினும் விடுதலைக்கு தம் வாழ்வை அர்ப்பணித்தார். நாட்டு பற்றை துறக்காத துறவி சுப்பிரமணிய சிவா ஆங்கிலேய ஆட்சியின் அடக்குமுறைக்கு பல இன்னல்களை அனுபவித்தார். சிறையில் அடைக்கப்பட்ட அவருக்கு தொழுநோய் ஏற்பட்டது. ஆனால் நோய் கொடுமையைக் கண்டுகொள்ளாமல் விடுதலை போராட்டத்தில் பங்கேற்றவர் சுப்பிரமணிய சிவா. இவர்கள் வரிசையில் நாட்டுக்காகத் தன்னுயிரைத் தியாகம் செய்த செண்பகராமனும் ஒருவர்.

**எம்டன் கப்பல்**

எதிர்பாராத நேரத்தில் ஆபத்தை ஏற்படுத்துபவன் எம்டன் என்ற சொல்லாடல் தமிழகத்தில் கடந்த நூறாண்டுகளாக வழக்கத்தில் இருந்து வருகிறது. அதேவேளையில் துடுக்குத்தனமான, தைரியமானவர்களையும் எம்டன் என்று சொல்வதுண்டு. இதற்குக் காரணம் ஜெர்மனியின் எஸ்.எம்.எஸ் எம்டன் என்ற அதிநவீன போர்க்கப்பல் சென்னையில் நடத்திய தாக்குதல் தான்.

முதலாம் உலகப்போர் 1914-ம் ஆண்டு முதல் 1918-ம் ஆண்டு வரை நேச நாடுகளான பிரான்ஸ், ரஷ்யா, இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கும், மைய நாடுகளான ஆஸ்திரேலியா, ஹங்கேரி, ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளுக்கும் இடையே நடைபெற்றது. உலக நாடுகள் எல்லாம் ஒன்றையொன்று தாக்கிக் கொண்டு இருந்த நேரம். அப்போது இந்தியா ஆங்கிலேயர்கள் வசம் இருந்தலும், முதலாம்

உலகப்போரின் தாக்கம் இந்தியாவையும் விட்டுவைக்கவில்லை. இந்தநிலையில், அமைதிப்பூங்காவான தமிழகத்தில், ஆங்கிலேயர்கள் கிழக்கிந்திய கம்பெனியை 'மதராசாப்பட்டினம்' என்று அழைக்கப்பட்ட சென்னையில் ஆரம்பித்து இருந்ததால், அதனைச் சுற்றியே அவர்களின் வாழ்வாதாரத்தை அமைத்திருந்தனர். இதனால் ஜெர்மனியின் கோரப்பார்வை சென்னை மீது திரும்பியது.1914-ம் ஆண்டு செப்டம்பர் மாதம், சென்னை நோக்கி வீரர்கள் வந்தனர்.

**சென்னையில் குண்டு மழை**

செப்டம்பர் மாதம் இறுதியில் தமிழகம் நவராத்திரி கொண்டாட்டங்களில் கவனம் செலுத்திக் கொண்டு இருந்தனர். போர்க் காலம் என்பதால் வங்கக் கடலில் தீவிர கண்காணிப்பில் ஆங்கிலேய படை வீரர்கள் ஈடுபட்டிருந்தனர். ஆனாலும் அவர்களின் கண்களில் படாமல் ஜெர்மனி நாட்டின் கடற்படையைச் சேர்ந்த கேப்டன் கார்ல் வான் முல்லர் தலைமையில் போலந்து நாட்டில் உருவாக்கப்பட்டு ஆழ்கடலில் எந்தச் சவாலையும் எதிர்கொள்ளும் அதிநவீன ஜெர்மானிய போர்க்கப்பலான எம்.எஸ்.எம். எம்டன் கப்பலில் ஜெர்மன் நாட்டு வீரர்களுடன் சென்னை துறைமுகத்தில் இருந்து 2.7 கி.மீ தொலைவில் வங்க கடலில் செப்டம்பர் 22-ந்தேதி இரவு 10 மணி அளவில் வந்து எம்டன் கப்பல் நங்கூரம் பாய்ச்சி நின்றது. இந்த கப்பலில் இந்தியாவை காப்பாற்ற வேண்டும் என்ற வேட்கையுடன் இருந்த பொறியாளர் செண்பகராமனும் பணியில் இருந்தார்.

கப்பல் நிறுத்தப்பட்ட சில வினாடிகளில், சென்னையை நோக்கிக் குண்டு மழை பொழிந்தது. சற்றும் எதிர்பாராத ஆங்கிலேயர்கள் நிலைகுலைந்து போயினர். உடனடியாக சுதாரித்துக் கொண்ட ஆங்கிலேயர்கள் (பிரிட்டிஷ்காரர்கள்) மின்சாரத்தை நிறுத்தி நகரையே இருளில் மூழ்கச் செய்தனர். ஆனால் ஐகோர்ட்டு வளாகத்தில் இருந்த கலங்கரை விளக்கம் மட்டும் எரிந்து கொண்டிருந்தது. அந்த வெளிச்சத்தை மையமாக வைத்து, 'எம்டன்' கப்பலில் இருந்து பீரங்கிகள் மூலம் 13 சுற்றுகள் ஒரு சுற்றுக்கு 10 குண்டுகள் வீதம் 130 குண்டுகள் பொழிந்தன.

**ஆங்கிலேயருக்குச் சிம்ம சொப்பனம்**

அடுத்தடுத்து புயல் போல் வேகத்தில் வந்த குண்டுகள் முதலில் துறைமுகத்தில் இருந்த 'பர்மா ஆயில் கம்பெனியின்' 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மண்ணெண்ணெய் கிடங்கைத் தாக்கியதில் முழுவதும் வெடித்து சிதறின. சென்னை மக்கள் அதனை நீண்டநேரமாய் வாணவேடிக்கை பார்த்தனர். மூன்று கிடங்குகளும், ஒரு வர்த்தகக் கப்பலும் சேதமடைந்தது. சிறிய வணிக கப்பலைச் சுட்டு வீழ்த்தியதிலில்

மூன்று பேர் உயிர் இழந்ததுடன் சிலர் காயமும் அடைந்தனர். சென்னை துறைமுகம் அறுபது சதவீதம் சேதம் அடைந்ததாகத் தெரிவித்தனர். உயர்நீதி மன்றத்தின் கிழக்குச் சுவர் உட்பட பல கட்டடங்கள் சேதமடைந்தன. ஒரு குண்டு விழுந்து வெடித்ததில் ஐகோர்ட்டு சுற்றுச்சுவர் முழுவதும் இடிந்து விழுந்தது. மற்றொரு குண்டு வெடிக்காமல் ஐகோர்ட்டு வளாகத்திலேயே கிடந்தது. தாக்குதல் நடத்திய சில மணி நேரத்தில் 'எம்டன்' கப்பல் சென்னையைவிட்டு ஆழ்கடலுக்குச் சென்றது.

ஆங்கிலேயக் கடற்படை பின்தொடர்ந்தும், 'எம்டன்' கப்பலை ஒன்றும் செய்ய முடியவில்லை.

சென்னை வாழ் மக்கள் பலருக்கு இந்த உண்மையே விடிந்தவுடன் தான் தெரிந்தது. விஷயம் அறிந்தவுடன் சிலர் பீதியில் ஊரைவிட்டுச் சென்றாதகவும் கூறப்படுகிறது. அப்போதைய சென்னை ஆளுநராக இருந்த பெண்ட்லாண்ட் ஓய்விற்காக ஊட்டி சென்றிருந்தார். தகவல் அறிந்ததும் செப்டம்பர் 25ஆம் தேதி சென்னை திரும்பினார். ஆங்கிலேயரையே தலை குனிய வைத்த எம்டனை சென்னை மக்கள் பெருமையுடன் பேசினர். வெடிக்காமல் கிடந்த குண்டு எழும்பூரில் உள்ள அரசு அருங்காட்சியகத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது. ஆங்கிலேயே படைக்கு சிம்மசொப்பனமாக விளங்கிய இந்த 'எம்டன்' கப்பல் 1914ஆம் ஆண்டு நவம்பர் 9ஆம் தேதி ஆஸ்திரேலிய போர் கப்பலால் சிட்னி துறைமுகம் அருகே சுட்டு வீழ்த்தப்பட்டு கடலுக்குள் மூழ்கடிக்கப்பட்டது.

**108 ஆண்டுகள் நிறைவு**

முதல் உலகப் போரில் இந்தியாவின் மீது நடந்த ஒரே தாக்குதல் இதுதான் எனும் பெருமையையும் எம்டன் தான் சென்னைக்கு பெற்றுத் தந்தது. சென்னையில் எம்டன்' கப்பல் குண்டு வீசிய பகுதியான ஐகோர்ட்டு வளாகத்தில் நினைவு கல்வெட்டு அமைக்கப்பட்டுள்ளது. வெடிக்காமல் கிடந்த குண்டு எழும்பூரில் உள்ள அரசு அருங்காட்சியகத்தில் காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது. குண்டு வீசிய பொறியாளர் செண்பகராமனுக்கு சென்னை கிண்டியில் உள்ள காந்தி மண்டபத்தில் சிலை வைக்கப்பட்டுள்ளது. சென்னையில் 'எம்டன்' கப்பல் குண்டு வீசிய இடத்தைக் காட்டும் வகையில் ஐகோர்ட்டுக்குள் நீதிபதிகள் செல்லும் வாசல் அருகில் உள்ள சுற்றுச்சுவரில் வைக்கப்பட்டுள்ள நினைவு கல்வெட்டில், பல்வேறு அமைப்புகளை சேர்ந்தவர்கள் மலர் தூவி மரியாதை செய்தனர். சென்னையில் "எம்டன்" கப்பல் குண்டு வீசி நேற்றுடன் 108 ஆண்டுகள் நிறைவடைந்தது. ஆனால் சென்னையில் "எம்டன்" கப்பல் குண்டு வீசியதை நினைவுகூரும் தடயங்கள் எதுவும் சொல்லும்படி இல்லை. சாதாரண மைல் கல்லைப்போலவே இதற்கான நினைவு கல்வெட்டு தேடிக் கண்டுபிடிக்கும் நிலையில் தான் உள்ளது. எனவே தமிழக அரசு "எம்டன்" கப்பல் குண்டுவீசிய இடத்தை

அடையாளம் காட்டும் வகையில் புதிதாக நினைவிடம் அமைக்க வேண்டும் என்று வக்கீல்கள் மற்றும் பொதுமக்கள் அரசுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

**யார் இந்த செண்பகராமன்?**

எம்டன் கப்பல் என்றவுடன் நினைவுக்கு வரும் பெயர் பொறியாளர் செண்பகராமன். இக்கப்பலில் உதவிப் பொறியாளராகப் பணியாற்றினார்.1891இல் திருவனந்தபுரத்தில் பணியாற்றிய காவல் அதிகாரியின் மகனாய்ப் பிறந்த தமிழ்க் குடும்பத்தை சேர்ந்தவரான இவர், இளம் வயதிலேயே சுதந்திர வேட்கையுடன் இருந்தார். ஜெர்மானிய உளவு அதிகாரியான சர்.வில்லியம் உடன் தன் 17ஆம் வயதில் அயல்நாடுகளுக்கு சென்று கல்வி பயின்றார்.சுவிட்ஸர்லாந்தில் அறிவியலில் பட்டமும், ஜெர்மனியில் பொறியியலில் முனைவர் பட்டமும் பெற்றார்.12-க்கும் மேற்பட்ட மொழிகளைக் கற்றார். நிறவெறிக்கு எதிரான பார்வையும், அடிமைத்தளையை உடைத்தெறியும் கோபமும் இயல்பாகவே அவரிடம் இருந்தது.'ப்ரோ இந்தியா' பத்திரிக்கையை ஆரம்பித்து ஆங்கிலேயர்களுக்கு எதிராகவும் இந்தியாவுக்கு ஆதரவாகவும் செய்திகளையும் வெளியிட்டார்.

ஜெர்மனியில் கெய்சர் இவர்பால் ஈர்க்கப்பட்டுப் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பெர்லினில் சக்தி வாய்ந்த மனிதராக வலம் வந்தார். இந்தியர்கள் பிரிட்டிஷாருக்கு அடிமையாகவே இருக்கவே தகுதி படைத்தவர் எனக்கூறிய ஹிட்லரை தன் வாதத் திறத்தால் மன்னிப்பு கேட்க வைத்தார். இதனை வெறுத்த ஜெர்மானியர்கள் உணவில் விஷம் வைத்து கொன்றதாகக் கூறப்படுகிறது. இறக்கும் தருவாயில் மனைவி தனக்குப் பின் இந்திய சுதந்திரத்திற்காகப் போராட வேண்டும் எனவும் தனது அஸ்தியைத் திருவனந்தபுரத்தில் உள்ள கரமனை ஆற்றிலும், கன்னியாகுமரி மாவட்ட (நாஞ்சில் நாட்டு) வயல்களிலும் தூவும் படியும் கூறிவிட்டு மறைந்தார்.

**எம்டன் கப்பல் வரலாறு**

ஆங்கிலேயர்களுக்குச் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்த, எம்.எஸ்.எம். எம்டன் கப்பல், தன் பணி காலத்தில், 31 கப்பல்களை கடலில் மூழ்கடித்திருக்கிறது. தன் வசீகரத் தோற்றத்தால், 'கிழக்கின் அன்னப்பறவை' என, எதிரிப்படைகளாலும் வர்ணிக்கப்பட்ட பெருமை, இதற்கு உண்டு. திடீர் தாக்குதல் மூலம் வெற்றி பெற்ற எம்டன் இருபதுக்கும் மேற்பட்ட கப்பல்களைக் கைப்பற்றியுள்ளது. ‘மோஸ்கெட்’ எனும் போர்க்கப்பலையும்,

'செம்ச்சுக்' எனும் ரஷ்யா நாட்டுக் கப்பலையும் மூழ்கடித்துள்ளது. கைப்பற்றப்பட்ட கப்பல்களில் 'எஸ்.எஸ்.ரியாசான்', 'எஸ்.எம்.எஸ். கார்மோரான்' கப்பல்கள் ஜெர்மன் நாட்டுப் போர்க்கப்பலாக மாற்றம் செய்யப்பட்டது.

சென்னை உள்ளிட்ட பகுதிகளை தாக்கிவிட்டு இறுதியாக ஆஸ்திரேலியா சென்றான் எம்டன். அங்கு நடைபெற்ற கடற்படைச் சண்டையில் எச்.எம்.ஏ.எஸ். சிட்னி என்ற கப்பலினால் தாக்கப்பட்டதால் "எம்டன்"கப்பல் 1914-ம்ஆண்டு நவம்பர் 9-ந்தேதி அன்று கடலில் தரைதட்டி நிறுத்தப்பட்டது. கப்பலில் இருந்த 376 பேரில் 133 பேர் கொல்லப்பட்டு மீதமுள்ளோர் சிறைபிடிக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டது. அப்போது வென்ற இந்த சிட்னி கப்பலை இரண்டாம் உலகப் போரில் ஜெர்மன் கப்பலான கார்மோரான் தாக்கி மூழ்கடித்து தானும் மூழ்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

**தாய்நாட்டின் விடுதலை**

சென்னையில் 'எம்டன்' கப்பல் குண்டு வீசிய பகுதியான உயர்நீதிமன்ற வளாகத்தில் நினைவு கல்வெட்டு அமைக்கப்பட்டுள்ளது. குண்டு வீசிய பொறியாளர் செண்பகராமனுக்கு சென்னை கிண்டியில் உள்ள காந்தி மண்டபத்தில் சிலை வைக்கப்பட்டுள்ளது. "நீரைவிட பலவீனமானது வேறொன்றுமில்லை ஆனால் வன்மையை வெற்றி கொள்வதில் அதைவிட உயர்ந்தது வேறொன்றுமில்லை" என்பார் தாவோ. தனியொரு மனிதனாக அயல்தேசம் சென்றாலும் தாய் நாட்டின் விடுதலைக்குப் பாடுபட்டு ஆங்கிலேயரால் பிடிக்க முடியாமல் உயிர்துறந்த வீரத்தமிழ் மகன் செண்பகராமன் எம்டன் குண்டு வீச்சினை நினைக்கும் போதெல்லாம் நினைவு கூறப்படுவார். ஆங்கிலேயர் இந்தியாவை விட்டு ஓடுவதற்கு செண்பகராமனின் தியாகமும் மகத்தானது. எத்தனை தலைமுறை வந்தாலும் அவருடைய நினைவைப் போற்றுவார்கள்.

சென்னையில் வசித்து வரும் செண்பகராமனின் பேரன் டாக்டர் சேது ஷேசன் கூறும் போது, தமிழ்நாட்டைச் சேர்ந்த எண்ணற்ற தியாகசீலர்கள் இந்திய விடுதலைக்காக தம் உயிரையும், உடைமைகளையும் இழந்தனர். அந்த வரிசையில் தாத்தா செண்பகராமனும் ஒருவர். அவருடைய தியாகத்தைப் போற்றும் வகையில் தமிழக அரசு மணிமண்டபம் கட்டுவதுடன், தமிழக பாடநூல்களிலும் செண்கபகராமனின் வீரவரலாற்றை சேர்த்து அடுத்த தலைமுறையினரும் அறிந்து கொள்ளும் வகையில் அதற்கான நடவடிக்கையில் இறங்க வேண்டும். அத்துடன் சென்னையில் குண்டு வீசிய செப்டம்பர் 22-ந்தேதியை முக்கிய நாளாகக் கருதி, அன்றைய தினத்தில் அரசு சார்பில் மரியாதையும் செலுத்த வேண்டும் என்றார்.

**முடிவுரை**

கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது என்ற ராமலிங்கம் பிள்ளையின் பாடல் தமிழக விடுதலை வீரர்களின் வேதமந்திரமாகப் பாடப்பட்டது. ஆஷ் என்ற ஆங்கில அதிகாரியைத் துப்பாக்கிக் குண்டுக்கு இரையாக்கிவிட்டுத் தன்னையும் மாய்த்துக் கொண்டார் வாஞ்சிநாதன். ஏந்திய மூவண்ண கொடியைத் தனது உயிரே போனாலும் கையில் பிடித்தபடி இறந்த திருப்பூர் குமரன். காந்தியின் அறவழியில் மூதறிஞர் ராஜாஜி, தந்தைபெரியார், செயல்வீரர் காமராஜர், வ.வெ.சு. அய்யர், முத்துராமலிங்க தேவர், சத்தியமூர்த்தி போன்ற பலரும் விடுதலை போராட்டத்தில் தம்மை இணைத்துக்கொண்டு இன்னல் பல ஏற்றனர். இந்த தியாகிகளின் தீரமிக்க தொண்டினால் விடுதலைப்போரில் தமிழக வீரர்கள் ஆற்றிய பங்கு இன்றும் இந்தியரின் மனதில் நிலைத்து நிற்கிறது. தமிழ்நாட்டைச் சேர்ந்த எண்ணற்ற தியாக சீலர்கள் இம்மண்ணின் விடுதலைக்காகத் தம் உயிரையும், உடைமைகளையும் இழந்தனர். அவர்கள் பெற்று தந்த விடுதலையை காப்பது மண்ணின் மைந்தர்களான ஒவ்வொருவரின் கடமையாகும்.

**பார்வை நூல்கள்**

1) ஜெய்ஹிந்து செண்பகராமன் வீரவரலாறு, சேது சேஷன், மணிமேகலை பிரசுரம், சென்னை, முதற்பதிப்பு,2019

2) திவாகர், எஸ்எம்எஸ் எம்டன்22-09-1914, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, முதற்பதிப்பு, 2013